## 1. நிதிககூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5. சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 நவம்பர் 26 ஆம் திகதிய 15/2018 ஆம் இலக்க பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் சுற்றறிக்கை | பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் பொது திறைசேரியினதும் அங்கீகாரம் இன்றி 2020 ஆகஸ்ட் முதல் 2023 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்காக ஊழியர் அக்ரஹார காப்புறுதி முன்மொழிவொன்றுக்காக அக்ரஹார பங்களிப்பாக ரூபா 441,600 தொகை நிறுவகத்தின் தேசிய காப்புறுதி நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | பதவியணி நலன்புரி யின் கீழ் குறித்த ஆண்டுகளில் பாதீட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 மே 18 ஆந் திகதிய UGC/L/2020 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கடிதம் | அனைத்து பட்டப்பின் படிப்பு நிறுவனங்களின் முகாமைத்துவ சபையின் மொத்த அங்கத்துவம் அதிகபட்சமாக 11 உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதறகு முரணாக 20 பேருடன் கூடிய முகாமைத்துவ சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, 2019 சனவரி முதல் 2023 திசெம்பர் 31 வரையிலான காலப் பகுதியில் 29 முகாமைத்துவவ சபைக் கூட்டங்களுக்காக மேலதிக உறுப்பினர்களுக்காக மொத்தம் ரூபா 1,109,920 | முகாமைத்துவ சபை உள்ளடக்கத்தை குறைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஆன செலவினமொன்று பங்குபற்றல் படிகளாக மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு
### நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 15,467,962 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 238,811,062 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 254,279,024 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஆண்டில் அந்நியச் செலாவணி பரிமாற்றல் நட்டம் ரூபா 41,494,616 ஆகஇருந்தமை உள்ளக செயற்பாட்டு வருமானம் ரூபா 24,486,980 ஆல் குறைவடைந்தமை அரச கொடைகள் கிடைக்காமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2022 வகையான காலப்பகுதிக்குரிய 1790 மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 28,752,500 ஆன பாடநெறி கட்டணங்கள் மீளாய்வாண்டு இறுதி திகதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அனைத்து மாணவர்களுக்கும் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பாடநெறி கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | முதலீடுகள் முதிர்வடையும் போது விலை கோரி உயர்ந்த வட்டி வீதத்திற்கு மீண்டும் முதலீடு செய்ய வேண்டிய போதிலும் அவ்வாறான வெளிப்படையொன்று இல்லாமல் நடவடிக்கை எடுத்தல் மற்றும் கூடிய வட்டி வீதத்தை பெற்று தரும் மக்கள் வங்கியுடன் கொடுக்கல் வாங்கல்களை இடைநிறுத்துவதற்கு நிறுவனத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது அதன் பிரகாரம் 2022 ஜனவரி முதல் 2023 ஜூன் வரையான காலப்பகுதிக்குரிய 17 நிலையான வைப்புகளுக்காக மொத்தம் 6,285,474 ஆன வட்டி வருமானமொன்று இழக்கப்பட்டு இருந்தது | நிறுவகத்தின் நிதி மோசடிக்குரிய வழக்கின் சான்றாக சமர்ப்பிப்பதற்கு தேவையான நம்பிக்கையில் மக்கள் வங்கியில் பேணி செல்லப்பட்ட 6 நிலையான வைப்புக்களை மீண்டும் அவ்வங்கியில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் ஏனைய அரச வங்கிகளில் இருந்து விலை கோரி உயர்ந்த வட்டி விகிதத்தின் கீழ் உரிய முதலீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக | வெளிப்படையாக நடவடிக்கை எடுத்து முதலீட்டின் மூலம் உயர்ந்த நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 2021 ஆம் ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் இலக்கிடப்பட்ட மாணவர் பதிவு அளவு முறையே 300 மற்றும் 200 ஆக இருந்த போதும் 97 மாணவர்கள் மற்றும் 129 மாணவர்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தனர். அவ்வாறே 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கையான 1588 அளவில் 2023 ஆம் ஆண்டு முடிவடையும் போது 394 மாணவர்கள் பாடநெறியை விட்டுச் சென்றிருந்ததுடன் | பொதுவாக 3 பாடநெறி களுக்காக மாணவர்கள் அதிக அளவில் விண்ணப்பிக்கின்ற பாடநெறிகள் அல்லாமை மற்றும் கடந்த காலங்களில் நாட்டில் எதிர்பாராமல் ஏற்பட்ட சரிவு நிலைமைகள் காரணமாக உரிய திகதிகளில் பாடநெறிகளை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்தமை இதற்கான காரணங்களாகும். | வெளிப்படையாக நடவடிக்கை எடுத்து முதலீட்டின் மூலம் ஆகக்கூடிய நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| அது பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையில் 25 சதவீதமாக இருந்தது. மாணவர்கள் பாடநெறிக்காக பதிவுகளை குறைவடைந்தமை மற்றும் பாடநெறியை விட்டுச் செல்வதற்கான காரணங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தி இருக்கவில்லை | | |

**3.3 நிதியத்தின் குறை பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்திற்காக முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) ஒன்றை திட்டமிடுதல் அபிவிருத்தி செய்தல் ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தலுக்காக ரூபா 4,440,457 தொகைக்கு 2022 ஜுன் 12 ஆம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை செய்யப்பட்டது உடன்படிக்கை காலத்தை மிகைத்து 09 மாதங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் அறிக்கை தேதி வரை முகாமைத்துவ தகவல் முறைமையின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | கால நீடிப்பினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் இதுவரை அனைத்து மொடியுளுக்காக முறைமை தேவைப்பாடு விதந்துரைகள் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக | உடன்படிக்கை கால எல்லைக்குள் ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் |